பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2053 தை 10 ஞாயிற்றுக்கிழமை 23.01.2022 கதிர் 305

## கடன் விவகாரத்தால் குடும்பஸ்தர் கொலை

குடும்பஸ்தர் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை, சூரியவெவ பிரதேசத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனச்சூரியவெவப்பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

முவன்பெலஸ்ஸ, சூரியவெவ பிரதேசத்தை சேர்ந்த 62 வயது நபரே இவ்வாறு ☞2

# என்னைச் சிறைக்குள் தள்ள ஆதாரங்கள் எதுவும் இல்லை

### மைத்திரி அதிரடி அறிவிப்பு



இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு தன்னை சிறைப்படுத்த முடியாது எனவும், தன்னைச் சிறைப்பிடிப்பதற்கான காரணங்களோ அல்லது சாட்சிகளோ இல்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

தன்னைச் சிறைப்படுத்தப் போவதாக வெளியாகும் தகவல்கள் பொய்யானவை எனவும் தவறான ☞2

## வெடிபொருள்களுடன் இளைஞர் சிக்கினார்

களுத்துறை, ஹொரணைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொஸ்கொடவெல்ல மகுருவல பிரதேசத்தில், வெடிபொருள்களைத்தம்வசம்வைத்திருந்த இளைஞர் ஒருவரைப் பாணந்துறை பிரிவின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர். ☞2

## மேல் மாகாணத்தில் அதிகரிக்கும் ஒமிக்ரோன்

இலங்கையில் இரண்டு ஒமிக்ரோன் திரிவுகளின் பரவல் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றின் அதிக பரவல் மேல் மாகாணத்திலேயே உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில்மேலும்75பேருக்குஒமிக்ரோன் வைரஸ் திரிவு கண்டறியப்பட்டது என விசேட வைத்திய நிபுணர் கலாநிதி சந்திம ஜீவந்திர நேற்று தெரிவித்திருந்தார். ☞2

# நான்கு மணிநேர மின்வெட்டு உறுதி

### வெளியானது இறுதி அறிவிப்பு

**நாட்டில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் 4 மணித்தியாலங்களுக்கு மின்சாரம் துண்டிக்கப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.**

**இன்று காலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது இலங்கை மின்சார சபையின் ஏற்பாட்டாளர் ரஞ்சன் ஜயலால் இதனைத் அறிவித்துள்ளார்.** ☞2



## காதல் பகையால் இளைஞர் கழுத்து வெட்டிப் படுகொலை

இளைஞர் ஒருவர் கண்ணாடித்துண்டால் கழுத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு இன்று தெரிவித்துள்ளது.

கம்பஹா, கடவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனக் கடவத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடவத்தை, கோணஹேன பிரதேசத்தை சேர்ந்த 20 வயது நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபர், ராகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நுவர வீதி, கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 19 நபரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

காதல் விவகாரமே இந்தப் படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசுக்கு எதிராகக் கொழும்பில் நாளை ஆசிரியர் சமூகம் மாபெரும் போராட்டம்

மத்திய மாகாண ஆசிரிய உதவியாளர்களுக்கு நீண்டகாலமாக நியமனம் வழங்கப்படாதுள்ளமையைக் கண்டித்து நாளை திங்கட்கிழமை கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாண ஆளுநரின் தன்னிச்சையான தீர்மானங்கள் காரணமாகவே குறித்த நியமனம் இதுவரை வழங்கப்படாதுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் மத்திய மாகாண ஆசிரியர் உதவியாளர்களுக்கான நியமனம் வழங்கப்படவிருந்த நிலையில், அது மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டிருந்தது.

பயிற்சியினை நிறைவு செய்த ஆசிரிய ☞2



# நாடாளுமன்றின் பதவிக் காலத்தை நீடிக்கும் எண்ணம் அரசிடம் இல்லை

### அமைச்சர் நாமல் திட்டவட்டம்

நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு எந்தவொரு திட்டமும் அரசிடம் இல்லை என்று அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தையும், நாடாளுமன்றத்தின் பதவி காலத்தையும் இரு வருடங்களுக்கு நீடிக்க வேண்டும். அதற்கான யோசனை முன்வைக்கப்படும் என்று டயனா கமகே எம்.பி. சபையில் நேற்று விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். ☞2



## சுகாதார அமைச்சின் முன்னாள் செயலர் கொரோனா தொற்றால் பரிதாப மரணம்

சுகாதார அமைச்சின் முன்னாள்செயலாளரும்முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமுமான வைத்தியர் அதுல கஹந்தலியனகே நேற்றிரவு காலமானார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கொரோனாச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் தமது 74 ஆவது வயதில் காலமானார்.



அவரது இறுதிச் சடங்குகள் கொரோனாத் தடுப்புச் சட்டவிதிகளுக்கமைய நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரசுக்கு எதிராகக் கொழும்பில் நாளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உதவியாளர்களுக்கான நியமனத்தை உடனடியாக வழங்குவது தொடர்பில் நிதியமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே முன்னதாக தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், மத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 300இற்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்ற போதிலும், இந்த ஆசிரியர் உதவியாளர்களுக்கான நியமனங்கள் இதுவரை வழங்கப்படாதுள்ளன.

இந்தநிலையில், அரசால் உடனடியாக அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

## நாடாளுமன்றின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு :-

தேர்தல்கள் உரிய காலப்பகுதியில் நடத்தப்படும். அவ்வாறு நடத்தித்தான் ராஜபக்ஷக்களுக்குப் பழக்கம். எனவே, நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் நீடிக்கப்படமாட்டாது. அதற்கான தேவையும் எழவில்லை. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மூன்றாண்டுகளுக்குள் நிறைவேற்றுவோம். - என்றார்.

## நான்கு மணிநேர ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாளை முதல் ஒரு மணி நேரம் மின்வெட்டு இருந்தாலும், அதனை மேலும் இரண்டு மணிநேரமாக நீட்டிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், அடுத்த வெள்ளிக்கிழமை வரை மட்டுமே இந்தச் செயன்முறையைத் தொடர முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் இலங்கை மின்சார சபை நிச்சயமாக 4 மணித்தியால மின்வெட்டை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்எனவும்அவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது வறட்சியற்ற கால நிலை நிலவுகின்ற போதிலும் நீர்மின் நிலையங்கள் முழுக் கொள்ளளவுடன் இயங்கி வருகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் எதிர்காலத்தில் குடிதண்ணீர் மற்றும் விவசாயத்துக்குத் தேவையான நீரை வழங்க முடியாத நிலை ஏற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மேல் மாகாணத்தில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்நிலையில், குறித்த தொற்றாளர்கள், கொழும்பு, அவிசாவளை, பொரலஸ்கமுவ, ஹோமாகம, கட்டுகொட, கொஸ்கம, மடபான, பாதுக்க, வெல்லம்பிட்டி, கொலன்னாவ, கல்கிசை, நுகேகொடை, அங்கொடை, பதுளை, காலி மற்றும் ருவன்வெல்ல முதலான பகுதிகளில் பதிவாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெடிபொருள்களுடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போதுருவதண்ட பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது 22 டெட்டனேட்டர்கள், 150 வோட்டர் ஜெல்கள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## என்னைச் சிறைக்குள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தகவல்கள் பரவுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில்பிரச்சினைகள்காணப்படுகின்ற நிலையில் நாளை எவ்வாறு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதல்ல பிரச்சினை. இன்று நாடு காணப்படுகின்ற நிலைமையில் மக்களின் வறுமை, பொருளாதார நெருக்கடி, விவசாயிகள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினை என அனைத்தில் இருந்தும் எவ்வாறு மேலெழுவது என்பது குறித்த வேலைத்திட்டங்கள் அவசியம்.

இதற்கமையயே நாம் சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கின்றோம். இதற்கமைய எமது வேலைத் திட்டங்களை பெப்ரவரியில் வெளியிடுவோம். இதற்கமைய எம்முடன் இணைந்து கொள்ளுமாறு நாம் ஏனைய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றோம். என்னைக் கைதுசெய்யப்போவதாக வெளியாகும் கருத்து பொய்யானது.

என்னைச் சிறைப்படுத்தும் அளசுக்கு எவ்வித காரணங்களும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் இல்லை. என்னைச் சிறைப்படுத்துவதற்கு எவ்வித சாட்சிகளோ, காரணங்களோ இல்லை.

இதேவேளை ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கவேண்டும் என்று நாடாளுமன்றஉறுப்பினர்டயானகமகேகூறினால், அவருக்கு தலையில் ஏதோ பிரச்சினை இருக்கின்றது என்றே கருத வேண்டும். - என்றார்.

## கடன் விவகாரத்தால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

கடன்விவகாரமே இந்தப்படுகொலைக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

படுகொலையுடன் தொடர்புடைய நபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.


விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

Personal
English Classes
K.Ganesh (BA.Pera)
Grade 10, GCE O/L
Literature 2022, 2023
Grade 7 - GCE O/L, A/L,
பட்டதாரிகள், தொழில்புரிவோர்
Spoken Grammar
கற்கமுடியும்.
077 766 8725
நீராவியடி, யாழ்நகர்.



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்





தொடர்புகளுக்கு: 0777 43 5557

JITF
SPECIAL DISCOUNT 150,000/-
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலைத் தொழிற்சாலை
கோப்பித் தொழிற்சாலை
சுற்றுலா ஏற்பாடுகள்
5th Project
இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## புரட்டுப் பிரசாரம்

வெளிநாட்டுப் பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள், உயர் அதிகாரிகளின் வருகை மற்றும் சந்திப்புகளை ஒட்டிய விடயங்களையும் கூடத் தனது சின்னத்தனமான அரசியல் நலன்களுக்காகத் தவறாக அர்த்தம் கற்பித்து முன்னிலைப்படுத்தும் தனது பண்பியல்பை ராஜபக்ஷ அரசாங்கம் தொடரவே செய்கின்றது. இது அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்த பிரிட்டனின் தெற்காசிய மற்றும் பொதுநலவாய நாடுகளுக்கான அமைச்சர் தாரிக் அஹமட் பிரபுவின் விடயத்திலும் படுகொச்சைத்தனம் அரங்கேறியிருக்கிறது.

இலங்கையின் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்ற விடயங்களில் மேலும் தாமதமின்றி, பொறுப்புக்கூறலை நிலைநாட்டி, நீதி முறையான விசாரணைகளை நடத்தி, மீள நிகழாமையை உறுதிப்படுத்தி, இழப்பீடுகளை வழங்கும்படி சர்வதேச சமூகம் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஊடாகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, வலியுறுத்தி வருகிறது.

இந்த விவகாரத்தில் இப்போது விடயங்களை முன்னெடுக்கும் மேற்குலகத் தரப்புக்கு ஜெனிவாவில் பிரிட்டனே முன்னிலையும் தலைமையும் வகிக்கின்றது.

இந்த விடயங்களில் மனித உரிமைகள் சர்வதேச நியமங்களுக்கு அமைவாகப் பேணப்படவில்லை என்ற குற்றச்சாட்டு கொழும்புக்கு எதிராகத் தீவிரமாகவும் கடுமையாகவும் முன்னெடுக்கப்படும் நிலையில், ஜெனிவாவில் அந்த விவகாரத்தை முன்னின்று தலைமை வகித்துக் கையாளும் பிரிட்டனின் – அதுவும் பிரிட்டனில் இலங்கை உட்பட்ட விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் – இலங்கையின் மனித உரிமைகள் பேணும் நடவடிக்கைகளைப் பாராட்டுகின்றார், மெச்சுகின்றார், சிலாகிக்கிறார் என்ற பாணியில் செய்தி வெளியிடுகின்றது இலங்கை ஜனாதிபதியின் செயலகம்.

அதுவும், இலங்கை ஜனாதிபதிக்கும் பிரிட்டனின் அமைச்சருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பை அடுத்து ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிக்கையிலேயே இப்படி பிரிட்டிஷ் அமைச்சர் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைகளை மெச்சிப் பாராட்டினார் என்று செய்திகள் வெளியிடப்படுகின்றன.

இதுகுறித்து அன்று மாலையே தாம் கூட்டமைப்புத் தலைவர் இரா சம்பந்தன், பேச்சாளர் சுமந்திரன் ஆகியோரைச் சந்தித்துப் பேசியபோதே பிரிட்டிஷ் அமைச்சர் நிலைமையைத் தெளிவுபடுத்தியிருந்தார்.

"நடந்த சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூறல், தற்போதைய மனித உரிமைகள் நிலைமை, அரசியல்தீர்வு ஆகிய மூன்று அம்சங்கள் குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் பேசினேன். அவற்றை ஆக்கபூர்வமாக அணுகுவதற்கு தாங்கள் நடவடிக்கை எடுப்பார்கள் என்று அவர்கள் (கொழும்பு அரசு) கூறியமையை நாம் வரவேற்றோம். இந்த விடயங்களில் முன்னேற்றகரமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற கொழும்பின் வாக்குறுதி சொல்லிலும் செயலிலும் ஒரே மாதிரியாக நடைமுறைப்படுத்தப்படுவதை நாங்கள் பார்த்திருக்கின்றோம் என்று இலங்கைத் தலைவர்களிடம் கூறினோம்" – என்ற சாரப்படவே பிரிட்டிஷ் அமைச்சர், சம்பந்தன் – சுமந்திரன் இணையிடம் தெரிவித்திருந்தார். அது காலைக்கதிரிலும் விவரமான செய்தியாக வெளியாகியிருந்தது.

ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்த பிரிட்டன் அமைச்சர், மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை எடுக்கும் நடவடிக்கைகளைப் பாராட்டி, வரவேற்று, சிலாகித்துப் பேசினார் என்று புரட்டு தகவல்களை வெளியிட்டு இருக்கின்றது இலங்கைத் தரப்பு. அப்படி மனித உரிமைகள் விடயங்களில் இலங்கையின் நிலைமை மேம்பட்டு விட்டது என்றால் ஜெனிவா நடவடிக்கையே தேவையற்றதாகிவிடும். ஜெனிவாச் செயற்பாட்டுக்குப் பிரிட்டன் தலைமை வகிப்பதும் அவசியமற்றது என்றாகிவிடும் அல்லவா?

"கோட்டாவைச் சந்தித்தபோது, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தீர்மானம் மற்றும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் ஆகியவற்றுக்கு அமைய மனித உரிமைகள், நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறலை இலங்கை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினேன்" என்று இப்போது தெளிவுபடுத்தி இருக்கின்றார் பிரிட்டன் அமைச்சர். இதன்மூலம் ஜனாதிபதி செயலகத்தின் புரட்டுப் பிரசாரம் அம்பலப்படுத்தப்பட்டிருக்கின்றது.

# ராஜபக்ஷ பரம்பரையின் அரசியல் முடிவுக்கு வரும்



### ஆரூடம் கூறிய ஜோதிடர்

2030 ஆம் ஆண்டுக்குள் இலங்கையில் ஒரு மன்னன் அவதரிப்பார் என கொரோனா பாணி தயாரித்த ஆன்மீகவாதியான ரிட்டிகல தேவிந்த ஆரூடம் கூறியுள்ளார்.

அவர் இளவரசர் தியசேன என்று சிலரால் அழைக்கப்படும் நபர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பாரிய பொருளாதார, கலாசார மற்றும் மனித வளர்ச்சியை நோக்கி அழைத்துச் செல்வார் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 2030 ஆம் ஆண்டு மன்னரின் வருகையுடன் ராஜபக்ஷ பரம்பரையின் அரசியல் முடிவுக்கு வரும் என ரிட்டிகல தேவிந்த சுட்டிக்காட்டியுள்ளார்.

2025 ஆம் ஆண்டு மீண்டும் ராஜபக்ஷ தலைமுறையைச் சேர்ந்த ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்றும் அப்போது ராஜபக்ஷ பரம்பரையின் அரசியல் முடிவுக்கு வரும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி அல்லது மக்கள் விடுதலை முன்னணியால் நாட்டில் அதிகாரத்தைப் பெற முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இணையத்தள ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிட்ட அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

# பூஸ்டர் தடுப்பூசி பற்றி பிழையான தகவல்கள்!

### வருகின்றன என்கிறார் சன்ன ஜயசுமன



பூஸ்டர் தடுப்பூசி பற்றி பிழையான தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன என ராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

பூஸ்டர் தடுப்பூசி டோஸ் தொடர்பில் சமூகத்தில் பல்வேறு தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் முதல் டோஸ் மற்றும் இரண்டாவது டோஸ் மாத்திரைகளை ஏற்றிய போது ஏற்படாத பக்க விளைவுகள் எதுவும் பெரிதாக மூன்றாவது டோஸ் போடும் போது ஏற்பட்டதாக இதுவரையில் கண்டறியப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சு தொடர்ந்தும் ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், மூன்றாவது டோஸ் தடுப்பூசியை போட்டுக்கொள்ள வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமூக ஊடகங்களில் பூஸ்டர் டோஸ் பற்றி பிழையான தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்துள்ளார்.

கொவிட் அலையைக் கட்டுப்படுத்துவதற்கான சிறந்த வழி பூஸ்டர் டோஸ் போட்டுக் கொள்வதேயாகும் என பேராசிரியர் சன்ன ஜயசுமன ஊடகங்களிடம் தெரிவித்துளார்.

# புதிய ஒமிக்ரோன் வைரஸ் திரிவுகளின் பரவல் மேல் மாகாணத்தில் அதிக பதிவு

### சந்திம ஜீவந்திர தகவல்

நாட்டில் இரண்டு ஒமிக்ரோன் திரிவுகளின் பரவல் அடையாளம் காணப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, அவற்றின் அதிக பரவல் மேல் மாகாணத்திலேயே உள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்திர தெரிவித்தார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மேலும் 75 பேருக்கு ஒமிக்ரோன் வைரஸ் திரிவு உள்ளமை கண்டறியப்பட்டதாக கலாநிதி சந்திம ஜீவந்திர தெரிவித்தார்.

78 பேரின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் 75 பேருக்கு இவ்வாறு ஒமிக்ரோன் திரிவு உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

அவர்கள், கொழும்பு, அவிசாவளை, பொரலஸ்கமுவ, ஹோமாகம, கட்டுகொட, கொஸ்கம, மடபான, பாதுக்க, வெல்லம்பிட்டி, கொலன்னாவ, கல்கிசை, நுகேகொடை, அங்கொடை, பதுளை, காலி மற்றும் ருவன்வெல்ல முதலான பகுதிகளில் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# அத்தியாவசிய பொருள்களுக்கு சதொசவில் பாரிய தட்டுப்பாடு!

### ஏமாற்றத்துடன் திரும்பும் வவுனியா மக்கள்

வவுனியா, ஜன. 23

வவுனியாவில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நாடு பூராகவும் சதொச விற்பனை நிலையங்கள் ஊடாக அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படும் என வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையங்களுக்குச் செல்லும் பலரும் அத்தியாவசியப் பொருள்களைப் பெற முடியாது ஏமாற்றத்துடன் திரும்பி வருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக சீனி, பால்மா மற்றும் சில அரிசி வகைகளுக்குத் தட்டுப்பாடு காணப்படுவதாகப் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

பருப்பு மற்றும் பொன்னி அரிசி என்பனவே அங்கு அதிகமாகக் கிடைக்கின்றன எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# தேர்தல் வாக்கு இயந்திரங்களைக் கைப்பற்றுமாறு இராணுவத்துக்கு உத்தரவு வழங்கினாராம் ட்ரம்ப்!



## அமெரிக்காவில் வெடித்தது புதிய சர்ச்சை

கடந்த 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 16ஆம் திகதி அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் அதிபர் பதவியில் இருந்த கடைசிக் காலகட்டத்தில் அவர் அமெரிக்க இராணுவத்துக்கு அளித்த ஓர் உத்தரவு தற்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

அப்போது நடந்து முடிந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் அமெரிக்க ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடன் பெரும்பான்மைத்தொகுதிகளைப் பெற்று வெற்றிவாகை சூடினார்.

அமெரிக்கத் தேர்தல் ஆணையம் வாக்குகளை எண்ணிவந்த நிலையில் ஜோ பைடன் முன்னணி வகித்தமையை யடுத்து அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத டொனால்ட் ட்ரம்ப், வாக்குப் பதிவில் முறைகேடு நடந்திருப்பதாகவும், பிற நாடுகளுடன் உள்ள சட்ட விரோத தொடர்புகள் காரணமாக கணினி முறைகேடுகள் நடந்துள்ளன எனவும் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை பைடன்மீது முன்வைத்தார்.

மேலும் அமெரிக்க காங்கிரஸ், டொனால்ட் ட்ரம்ப் பதவி விலகக் கோரியும் தனது பதவியை இராஜினாமா செய்ய அவர் மறுத்தார். இதுபோன்ற பல அடாவடி செயல்களில் ஈடுபட்ட டொனால்ட் ட்ரம்பின் ஆதரவாளர்களும் அமைதியாக இருக்கவில்லை. வெள்ளை மாளிகையில் சுவர் ஏறிக் குதித்து இவர்கள் செய்த கலவரம் அப்போது சமூக வலைத் தளங்களில் வைரல் ஆகியது.

இந்நிலையில் தனது ஆட்சியைத்தக்க வைத்துக்கொள்ள அதிகாரம் கைமாறும் முன்னர் டொனால்ட் ட்ரம்ப் எந்த நிலைக்கும் செல்லத் துணிந்தார். இதனையடுத்து வாக்கு இயந்திரங்களைக் கையகப்படுத்த இராணுவத்துக்கு எழுத்து பூர்வமாக உத்தரவிட்டார். வெள்ளை மாளிகையில் இருந்து இந்த உத்தரவு இராணுவத் தலைமைக்கும் சென்றுள்ளது. அரசு ஆவண காப்பகத்தில் இந்த ஆவணங்கள் இந்நாள்வரை பாதுகாக்கப்பட்டன. இந்நிலையில் சமீபத்தில் இவை வெளியிடப்பட்டுள்ளன.

வாக்கு இயந்திரங்களைக் கைப்பற்றி அதனை முழுவதுமாக அழித்துவிட்டு தனது ஆட்சியைத்தக்கவைத்துக்கொள்ள டிரம்ப் முயற்சி மேற்கொண்டிருக்கிறார் என்று பலர் தற்போது குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்த விவகாரத்தில் அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களும் ட்ரம்ப் மீது கடும் அதிருப்தியில் உள்ளனர் என அவர் தற்போது பீதி அடைந்துள்ளார்.



# கார் குண்டுவெடிப்பினால் பயங்கரவாதிகள் தப்பியோட்டம்

சிரியாவில் ஐ.எஸ் பயங்கரவாதிகளை அடைத்து வைத்திருந்த சிறையின் கேற்றைக் கார் வெடிகுண்டு மூலம் வெடித்துத் தகர்க்கப்பட்டது.

இதில், சிறையில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட ஐ.எஸ் பயங்கரவாதிகள் தப்பியோடினர் எனக் கூறப்படுகிறது.

உலகின் பல்வேறு நாடுகளில் அச்சுறுத்தி வரும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பை ஒழிக்கும் நடவடிக்கையில் பல நாடுகள் தீவிரமாக இறங்கின.

இதில் அமெரிக்காவிற்கு சிரியாவின் வடக்கு பகுதியில் இருந்த குர்திஷ் கிளர்ச்சியாளர்களின் படைகளும் உதவின. ஐ.எஸ். பயங்கரவாதிகளை கைது செய்து அங்குள்ள சிறைகளில் அடைத்து அவர்களை கண்காணித்து வந்தனர். குர்திஷ் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிரியாவின் வடகிழக்குப் பகுதியில் ஹவெரன் என்ற சிறையிலும் நூற்றுக்கணக்கான ஐ.எஸ். பயங்கரவாதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், ஹவெரன் சிறையில் கார் குண்டுவெடிப்பு தாக்குதல் நடத்தப்பட்டது. சிறை கேட் மீது வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட கார் வேகமாக வந்து மோதியது. இதில் கார் வெடித்துச் சிதறியதுடன், சிறை கேற்றும் சேதமடைந்தது. இதனைத் தொடர்ந்து ஐ.எஸ் பயங்கரவாதிகள் சிறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்தினர். மேலும், சிறையில் அடைக்கப்பட்டிருந்த பயங்கரவாதிகளையும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் விடுதலை செய்தனர். இந்தச் சம்பவத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட ஐ.எஸ். பயங்கரவாதிகள் சிறையில் இருந்து தப்பிச் சென்றிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

# அமெ. – ரஷ்யா பேச்சுகள் தோல்வி: உக்ரைனில் போர்ப் பதற்றம் நீடிப்பு

ஜெனீவா, ஜன.23

உக்ரைன் விவகாரம் தொடர்பாக அமெரிக்கா – ரஷ்யா இடையிலான பேச்சில் எந்தத் தீர்வும் எட்டப்படாதமையால் எல்லையில் போர் பதற்றம் நீடிக்கிறது.

'நேட்டோ' எனப்படும் வட அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் கூட்டணியில் இணைய கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் விரும்புகிறது. இதற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் இந்த இணைப்பிற்கு ஆதரவு அளித்து வருகின்றன. இதனால் ஆத்திரம் அடைந்த ரஷ்யா, உக்ரைன் எல்லையில் இராணுவத்தைக் குவித்துள்ளது. எந்த நேரத்திலும் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பதற்றமான சூழலைத் தணிக்க, அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அன்டோனி பிளின்கன், ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கி லவ்ரோவ் ஆகியோர் பேச்சு நடத்தினர். சுவிட்ஸர்லாந்து நாட்டின் ஜெனீவா நகரில் நடந்த இந்தப் பேச்சில் எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை. இது குறித்து அன்டோனி பிளின்கன் கூறியவை வருமாறு:-

பேச்சு பயனுள்ள முறையில் இருந்தது. ரஷ்யா, உக்ரைன் மீது போர் தொடுக்கும் எண்ணமில்லை என்கிறது.

அப்படியெனில் உக்ரைன் எல்லையில் இருந்து படைகளை வாபஸ் வாங்கும்படி தெரிவிக்கப்பட்டது. அத்துடன் ரஷ்யாவின் கோரிக்கைகள் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து, அடுத்த வாரம் எழுத்து பூர்வமாகப் பதில் அளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் உக்ரைன் விவகாரம் தொடர்பாக மீண்டும் ரஷ்யா – அமெரிக்கா அதிபர்கள் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்யலாம் எனவும் யோசனை தெரிவிக்கப்பட்டது. – இவ்வாறு அவர் கூறினார்.



ரஷ்யா வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கி லவ்ரோவ் கூறுகையில் –

"அமெரிக்கா எழுத்து பூர்வ உத்தரவாதம் அளித்த பிறகே படைகளை வாபஸ் பெறுவது குறித்து முடிவு செய்யப்படும்" – என்றார். இதன் காரணமாக உக்ரைன் எல்லையில் போர் பதற்றம் நீடிக்கிறது.

# கனடாவில் இருந்து அமெரிக்காவுக்கு நடந்து செல்ல முயன்ற இந்தியர்கள் பலி!

கனடாவில் இருந்து அமெரிக்காவுக்குள் நடந்தே நுழைய முயன்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 இந்தியர்கள் பனியில் உறைந்து இறந்துள்ளனர் என அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

கனடாவில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 இந்தியர்கள், அமெரிக்காவுக்குள் சட்டவிரோதமாக நடந்தே நுழைய முயன்றனர் எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் ஒரு குழந்தை உட்பட 4 பேர், பனிப்பொழிவு அதிகம் உள்ள பகுதி வழியாகப் பயணித்துள்ளனர். அப்போது உறை பனியில் சிக்கி அவர்கள் அனைவரும் உயிரிழந்துள்ளனர்.

ஒரு குழந்தை உட்பட 4 இந்தியர்கள் உயிரிழந்த செய்தி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளதாகத் தெரிவித்துள்ள இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இது தொடர்பாகத் தேவைப்படும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள இந்தியத் தூதர்களுக்கு உத்தரவிட்டுள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் துயரச் சம்பவம் மனதை வேதனைக்கு உள்ளாக்கி இருப்பதாகத் தெரிவித்துள்ள கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இதுபோல், சட்டவிரோதமாக எல்லையைக் கடக்க யாரும் முயலக் கூடாது எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சீனாவில் பெரும் நிலநடுக்கம்

குயிங்காய், ஜன.23

சீன நாட்டில் வடமேற்கே அமைந்துள்ள குயிங்காய் மாகாணத்தில் டெலிங்கா நகரில் இன்று கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டரில் 5.8 ஆகப் பதிவாகியுள்ளதாக சீன நிலநடுக்க இணையமையம் தெரிவித்து உள்ளது.

இந்நிலநடுக்கம் 8 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. நில நடுக்கத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

கடந்த 12 ஆம் திகதியும் குயிங்காய் மாகாணத்தில் மென்யுவான் நகரப் பகுதியில் ரிக்டரில் 5.2 அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. ஒரே மாதத்தில் குயிங்காய் மாகாணத்தில் 2 ஆவது முறையாக நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்று குறைந்தால் முழு ஊரடங்கு இருக்காது என அமைச்சர் சுப்பிரமணியன் தகவல்



நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் பிறந்த நாளையொட்டி அவரது சிலைக்குத் தமிழக அரசின் சார்பில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்தார். பின்னர் அவர் ஊடகவியலாளர்களோடு கலந்துரையாடினார்.

அப்போது அவர், கொரோனா 3 ஆவது அலை தொடங்கிய நாளில் இருந்து இரவு 10 மணி முதல் காலை 5 மணிவரை இரவு ஊரடங்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அதற்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழு ஊரடங்குக்கும் மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்குகிறார்கள்.

கடந்த இரு நாள்களாகத் தொற்று எண்ணிக்கை சற்று குறையத்தொடங்கி இருக்கின்றமை ஆறுதலைத் தருகிறது. சென்னையில் தினசரி பாதிப்பு 9 ஆயிரம் என்பது வரை சென்றது. ஆனால் நேற்று ஆறாயிரமாகக் குறைந்துள்ளது. இதுபோன்று கொரோனாத் தொற்று குறைந்தால் இனி வரும் வாரங்களில் ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு இருக்காது.

இந்தியா முழுவதுமே பெரு நகரங்களில் தொற்று எண்ணிக்கை குறைந்து வருகிறது. விரைவில் இந்தப் பெருந்தொற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

இறப்பு சதவீத அடிப்படையில் பார்த்தால் சற்று அதிகரித் துள்ளது. அதேநேரம் இறந்தவர்களின் மருத்துவ பின்னணிகளை ஆராய்ந்தால், அவர்கள் இணை நோய் உள்ளவர்களாகவும், தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களாகவும் இருக்கிறார்கள்.

இரண்டுதவணைத்தடுப்பூசிபோட்டுக் கொண்டவர்கள் யாரும் கொரோனா தாக்கினாலும் இறப்பின் எல்லை வரை சென்றனர் எனப் பதிவாகவில்லை. எனவே, அனைவரும் கட்டாயம் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். – என்று தெரிவித்திருக்கிறார்.



# மூன்றாவது வாரமாக ஞாயிறில் முடங்கிய தமிழகம் கடைகள் அடைக்கப்பட்டு சாலைகள் வெறிச்சோடின

தமிழகத்தில் கொரோனாப் பரவல் காரணமாக கடந்த 6 ஆம் திகதி முதல் இரவு நேர ஊரடங்கும், ஞாயிற்றுக்கிழமைகளில் முழு நேர ஊரடங்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் கடந்த 8, 16 ஆகிய திகதிகளில் ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது. இந்த நிலையில் மூன்றாவது வாரமாக இன்று முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

நேற்று இரவு 10 மணியில் இருந்து இரவு நேர ஊரடங்கும் ஞாயிற்றுக்கிழமையான இன்று முழு ஊரடங்கும் கடைப்பிடிக்கப்படுகின்றமையால் தொடர்ச்சியாக நேற்று இரவில் இருந்து தமிழகச் சாலைகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

சென்னை உட்பட தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் முழு ஊரடங்கைக் கடுமையாக அமுல்படுத்த அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மக்கள் நடமாட்டமின்றி அனைத்து மாவட்டங்களிலும் நகர்ப்புறங்களில் உள்ள முக்கிய சாலைகள் மற்றும் ஊரக பகுதிகளில் உள்ள சாலைகள் என அனைத்து சாலைகளும் பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட போதிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் முக்கிய பணிகளுக்கு தடைவிதிக்கப்படவில்லை. அந்த வகையில் அத்தியாவசியப் பணியாளர்கள் இன்று வழக்கம் போல தங்களது பணியை மேற்கொண்டனர். தூய்மைப் பணியாளர்கள், மருத்துவமனை ஊழியர்கள், எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள், ஊடகவியலாளர்கள், பால் விநியோகம் செய்பவர்கள் உள்ளிட்டோர் வழக்கம்போல தங்களது பணிகளை மேற்கொண்டனர்.

# பூட்டிய திருப்பரங்குன்றம் முன்பாக ஊரடங்கு நாளில் மணம்புரிந்த சோடி

தமிழகத்தில் மதுரை மாவட்டம் மட்டுமல்லாது, விருதுநகர், சிவகங்கை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் முருக பக்தர்கள் முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் முதல் படைவீடு எனும் பெருமை பெற்ற திருப்பரங்குன்றத்தில் வந்து திருமணம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதற்காகவே திருப்பரங்குன்றம் நகரில் நூற்றுக்கும் மேற்பட்ட திருமண மண்டபங்கள் உள்ளன.

தற்போது கொரோனா மூன்றாம் அலை பரவலால் தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி கொரோனாப் பரவலைத் தடுக்கும் விதமாக வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல பக்தர்களுக்குத் தடை விதித்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கு அமுல்படுத்தப்படுகிறது.

தற்போது மூன்றாவது வாரமாக ஞாயிற்றுக்கிழமையான இன்று முழு ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதே சமயத்தில் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்ட திருமணம் உள்ளிட்ட வைபவங்கள் நடத்திக்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது.

இந்த நிலையில் இன்று முகூர்த்த நாளாகையால், ஏற்கனவே திருப்பரங்குன்றம் கோவிலில் திருமணம் செய்யத் திட்டமிட்ட ஏராளமானோர் இன்று அதிகாலையிலேயே அங்கு திரண்டனர். கோவிலுக்குள் செல்லத் தடையுள்ளதால் அவர்கள் கோவிலின் முன்பு நின்று மாலை மாற்றித் திருமணம் செய்து கொண்டனர். திருமணத்தின்போது மணமக்களின் உறவினர்கள் 20இற்கும் குறைவானவர்களே பங்கேற்றனர். காலை முதலே அடுத்தடுத்து ஏராளமான ஜோடிகள் திருமணம் செய்து கொண்டமையால் திருப்பரங்குன்றம் கோவிலின் முன்பு பரபரப்பு நிலவியது.



கூட்டம் சேரவிடாமல் ஒழுங்குபடுத்தலில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். முழு ஊரடங்கின் போதும் கோவில்கள் அடைக்கப்பட்ட நிலையிலும் பக்தர்கள் தங்களது இறை பக்தியைக் கைவிடாமல் பூட்டிய வாசலின் முன்பு திருமணம்செய்துகொண்டுசுவாமியை தரிசித்துச் சென்றுள்ளனர்.



# குடியரசுத் தின விழாவில் கலைநிகழ்ச்சிகள் ரத்து

இந்தியக் குடியரசுத் தின விழாக் கொண்டாட்டங்கள் அரசின் ஏற்பாட்டில் சென்னையிலும் மெரீனா கடற்கரையில் ஒரு மணி நேரத்துக்கு நடைபெறுவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு 35 நிமிட நேரத்தில் விழாவை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா பரவல் அதிகரித்துக் காணப்படுகின்றமையால் குடியரசு தின விழாவுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. சென்னையில் மெரினா கடற்கரை சாலையில் பொலிஸ் அதிகாரி டி.ஜி. பி. அலுவலகத்துக்கு எதிரே குடியரசு தின விழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

26ஆம் திகதி காலை 8 மணிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி தேசிய கொடியை ஏற்றிவைக்க, வீரதீரச் செயல்புரிந்தவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதக்கங்களை அணிவிக்கவிருக்கிறார். இந்த நிகழ்ச்சிகளுக்காக மெரினா கடற்கரைச் சாலையில் பிரமாண்ட மேடை அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தின விழாக் கொண்டாட்டங்கள் கலை நிகழ்ச்சிகளுடன்கோலாகலமாகநடைபெறுகின்றமை வழக்கம்.

ஆனால், இந்த ஆண்டு கொரோனா பரவல் அதிகமாக உள்ளமையால் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று ஒவ்வொரு அரசுத் துறைகளின் அலங்கார ஊர்தி அணி வகுப்புகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அறுவடைக்கு இன்னும் 4 வாரங்கள்தான் இருக்கின்றன மானிய பசளையோ, கொடுப்பனவோ கிடைக்கவில்லை!

## ஜனாதிபதியிடம் கொக்கட்டிச்சோலை விவசாயிகள் மனு



(வி.ரி.சகாதேவராஜா)

அறுவடைக்கு இன்னும் ஆக நான்கு வாரங்கள் இருக்கின்றன. ஆனால் எமக்கு வழங்கப்பட வேண்டிய மானிய பசளையோ, மானியஆ; பசளைக்கான கொடுப்பனவோ இன்னும் வழங்கப்படவில்லை. எமது ஜீவாதாரமான பயிர் அழிந்து நாசமாகும் முன்னர் இவற்றை வழங்குமாறு வேண்டுகின்றோம்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிடம் கொக்கட்டிச்சோலை கமநலப் பிரிவுக்குட்பட்ட கிளாக்கொடிச்சேனை கமநலஅமைப்பு அவசர வேண்டுகோளை விடுத்துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் சிவஞானம் அகிலேஸ்வரன், பொதுச்செயலாளர் வேலாப்போடி கணேசமூர்த்தி ஆகியோர் ஒப்பமிட்டு இந்த மகஜரை அனுப்பியுள்ளனர். பிரதிகள் விவசாய அமைச்சர், கிழக்கு ஆளுநர் தொடக்கம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரை அனுப்பப்பட்டுள்ளன.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :-

எமது கண்டத்தில் சுமார் நூறு விவசாயிகளுக்கு இன்னும் பிரஸ்தாப மானிய பொட்டாசியம் குளோரைட் பசளையோ, பசளை மானியமோ இன்னும் கிடைக்கவில்லை. இதனால் உரிய பசளையின்றி, பயிர்கள் மஞ்சள் நிறமாகி, வீரியம் குறைந்து வருகின்றன. அப்படியே விட்டால் பயிர் அழிந்துபோகும்.

உரிய அதிகாரிகளிடம் கேட்டால் 'வந்தால் தருவோம்' எனக் கைவிரிக்கிறார்கள்.

இன்னும் நான்கு வாரங்களில் பயிர் அறுவடை செய்யப்படும். இன்றைய நிலையில் உடனடியாகப் பசளையையும் மானியத்தையும் வழங்க ஆவன செய்ய வேண்டும். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மட்டக்களப்பு மாவட்ட ஆணையாளரின் கருத்து**

இதுதொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் பி.ஜெகநாதத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார்:–

இந்தப் பிரச்சினை கொக்கட்டிச்சோலைக்கு மாத்திரமல்ல, முழு மட்டு.மாவட்டத்திலும் உள்ளது.

மாவட்டத்தில் இன்னும் சுமார் 3ஆயிரம் பேருக்கு மானியப் பசளைக்கான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். விரைவில் அது வரும். வந்ததும் குறித்த விவசாயிகளுக்கு உடனடியாக வழங்குவோம்.

இதேவேளை பொட்டாசியம் குளோரைட் பசளை நாட்டிற்கு 48ஆயிரம் மெற்றிக்தொன் தேவை. ஆனால் வந்ததோ 30ஆயிரம் மெற்றிக்தொன். ஆக 18 ஆயிரம் மெற்றிக்தொன் தேவையாகிறது.

எனவே இந்தப் பசளைக்கான தட்டுப்பாடு என்பது மட்டக்களப்பிற்கு மட்டுமல்ல, முழு நாட்டிற்குமுரியது. எம்.ஓ.பி பசளைக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. எமக்கு பசளை கிடைத்தால் வழங்குவோம்.– என்றார்.






# கல்லடி டச்பார் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கொடியிறக்கத்துடன் நிறைவு

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் கல்லடி – டச்பார் புனித அந்தோனியார் ஆலயத்தின் 42 ஆவது வருடாந்தத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை பங்குத்தந்தை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

அதனைத் தொடர்ந்து கடந்த சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு புனித அந்தோனியாரின் திருச் சொரூபப் பவனி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி, கல்லடி–டச்பார்பிரதானவீதிகள் ஊடாக சென்று மீண்டும் ஆலயத்தை வந்தடைந்ததும், கூட்டெருக்கியக்கத் திரு அவையில் ஆவியானவரின் செயற்பாடு எனும் சிந்தனைக்கு அமைய நற்கருணை வழிபாடுகள் நடைபெற்றன.

நவநாள் காலங்களில் அருட்தந்தையர்களான அருட்பணி ஜோட்டன் ஜோன்சன், அருட்பணி ஏ.ஏ.நவரெட்ணம் அடிகளார் ஆகியோரது சிறப்பு அருளுரைகளுடன் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டன.

இவ்வாண்டிற்கான திருவிழா திருப்பலியானது அடுத்த நாள் காலை 7.00 மணிக்கு அருட்தந்தை அனிஸ்டன் மொறாயஸ் (இயேசு சபைத் துறவி) அடிகளார் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

நவ நாள்காலங்களில் புனிதரின் பரிந்துரையால் இறையருள் பெற்றிட அந்தோனியாரின் பக்தர்களை சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பு கல்லடி விபத்தில் தந்தை மரணம்; மகன் படுகாயம்



மட்டக்களப்பு – காத்தான்குடி பிரதானவீதியில் கல்லடி விபுலானந்தா இசை நடனக் கல்லூரிக்கு முன்பாக மோட்டார் சைக்கிள் மீது கொள்கலன் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும் மகனும் தூக்கி வீசப்பட்டதையடுத்து, பின்னால் வந்த உழவு இயந்திரத்தில் சிக்குண்டதில் தந்தை தலை நசுக்குண்டு அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த மகன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



நேற்று மாலை 5 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆரையம்பதியைச் சேர்ந்த 50 வயதுடைய சிவராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த மகன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பகுதியில் இருந்து மட்டக்களப்பை நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த தந்தையும் மகனும் இசை நடனக் கல்லூரிக்கு முன்பாக வேளாண்மை வெட்டும் இயந்திரம் ஒன்றை ஏற்றிச் சென்ற டிராக்டர் ஒன்றை முந்திச் செல்ல முயற்சித்தபோது பின்னால் வந்த கொள்கலன் வாகனம் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொள்கலன் வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிழக்குப் பல்கலையின் உபவேந்தராக பேராசிரியர் கனகசிங்கம் பதவியேற்பு

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் நேற்றுக் காலை கடமையேற்றுக்கொண்டார்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு – வந்தாறுமூலை பிரதேசத்திலுள்ள அலுவலகத்தில் கடமையேற்பு நிகழ்வு நடைபெற்றது.

சுமார் 25 வருடகால வரலாற்றைக் கொண்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பத்தாவது உபவேந்தராக மட்டக்களப்பு – கிரான்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரது கடமையேற்பு நிகழ்வில் பல்கலைக் கழக பதிவாளர் ஏ.பகீரதன், பீடாதிபதிகள் மற்றும் விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முகாமைத்துவப் பேராசிரியரான வல்லிபுரம் கனகசிங்கம் இதற்கு முன்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் முதல்வராகப் பணியாற்றியவராவார்.

# தமிழர்களுடன் தான் இந்தியா பேசவேண்டும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தல்




தமிழர் தாயகத்தில் இந்தியாவுக்கு ஏதாவது தேவையென்றால், இந்தியா பேச வேண்டியது தமிழர்களிடமே அன்றி சிங்களவர்களிடம் அல்ல எனத் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் சுழற்சிமுறையிலான உணவுத்தவிர்ப்பு போராட்டம் நேற்றுடன் (சனிக்கிழமை) 1800 ஆவது நாளைக் கடந்துள்ளது.

இதனையடுத்து அவர்களால் ஆர்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் –

இந்தியா தலைமைப் பாத்திரம் ஏற்று, ஐ.நா மேற்பார்வையில் பொதுவாக்கெடுப்பு நடத்தினால், தமிழர் தாயகத்தில் கச்சத்தீவு, திருகோணமலை துறைமுகம் மற்றும் பிற மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்குத் தமிழர்கள் தயாராக உள்ளனர்.

தமிழர் தாயகத்தில் இந்தியாவுக்கு ஏதாவது தேவையென்றால், இந்தியா பேச வேண்டியது தமிழர்களிடமே அன்றி சிங்களவர்களிடம் அல்ல. இந்தியா இலங்கையுடன் பேசினால், இந்தியா இலங்கையுடன் செய்து கொண்ட சொந்த ஒப்பந்தத்தை அது மீறும்.

இந்தியா ஒரு சக்தி வாய்ந்த நாடு என்பதையும், ஐ.நா. பாதுகாப்புக் கவுன்ஸிலில் நிரந்தர உறுப்பினர் ஆவதற்கான அந்தஸ்து நிலுவையில் இருப்பதையும் நாம் அறிவோம்.

இந்தியாவின் தலைமைத்துவத்தை உலகமே உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில், அது தனது ஒப்பந்தத்தை இலங்கையில் மீறியது என்பது குறிப்பிடத்தக்கது.

1987 ஆம் ஆண்டு இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தம் செய்த போது, வடக்கு, கிழக்கு தமிழர்கள் பூர்வீக குடிகள் என்றும், வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் அங்கீகரிக்கப்பட்டு அது தமிழர்களுக்குச் சொந்தமானது என்றும் இந்தியாவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வடக்கு கிழக்கில் உள்ள காணிகள் தமிழர்களுக்கு உரிமையானவை, அவர்களது நிலத்தின் மீது அவர்களுக்கு அதிகாரம் உள்ளது. உட்பட பல விடயங்கள் இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இப்போது திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய் தாங்கிகளை இந்தியா வாங்கியது. இது இந்தியாவின் உடன்படிக்கையின் தூய்மையான மீறலாகும், வடக்கு, கிழக்கு பகுதி தமிழர்களுக்கே உரியது என்பது இந்தியாவுக்கு நன்கு தெரியும்.

இலங்கையுடன் எந்த ஒப்பந்தமும் கையெழுத்திடும் முன் இந்தியா தமிழர்களிடம் கேட்டிருக்க வேண்டும். சீனத் தொடர்புகளில் இருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள இலங்கை புவிசார் அரசியலை விளையாட விரும்புகிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

தமிழர்களின் அனுமதியின்றி வடக்கு கிழக்கில் எவராலும் காணிகளையோ எண்ணெய்த் தாங்கிகளையோ கொள்வனவு செய்யமுடியாது. – எனத் தெரிவித்துள்ளனர்.

## யுவதிகளுக்கு தொந்தரவு 'கொடூரமான கோழை'!

### இலங்கை இளைஞன் தொடர்பில் ஆஸ்திரேலிய நீதிபதி சீற்றம்



யுவதிகளின் ஆபாசமான படங்கள் மற்றும் காணொளிகளை அனுப்புமாறு அவர்களை, வலியுறுத்தி பின்னர் அவற்றை, அவர்களது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் அனுப்பிய குற்றச்சாட்டை இலங்கை மாணவர் ஒருவர் ஏற்றுக்கொண்டார் என ஆஸ்திரேலிய செய்திச்சேவை ஒன்று தெரிவித்துள்ளது.

ரன்பதி அமரசிங்க என அடையாளம் காணப்பட்ட 24 வயதான அவர், ஆஸ்திரேலியாவில் உள்ள விக்டோரியா மாகாண நீதிமன்றத்தில் காணொளி இணைப்பு மூலம் முன்னிலையானார்.

இதன்போதே அவர், தமக்கு எதிரான 25 குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டீக்கின் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் அவர் இளம் பெண்களின் நிர்வாணப்படங்கள் மற்றும் காணொளிகளை அனுப்பும்படி வற்புறுத்தி வந்துள்ளார்.

அவர்கள், தமது கோரிக்கைகளுக்கு இணங்கத் தவறினால், அவர்களுடன் தொடர்பு கொண்டமைக்கான ஆரம்ப சாட்சியங்களை, பெண்களின் பெற்றோருக்கும், நண்பர்களுக்கும் அனுப்பப்போவதாக அச்சுறுத்தியுள்ளார்.

அமரசிங்கவின் குற்றச்செயல் 2018 ஆம் ஆண்டு ஆரம்பித்து 2020 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது, ஆஸ்திரேலிய பொலிஸாரின் விசாரணையைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.

அவர் மீது ஆரம்பத்தில் 16 குற்றங்கள் சுமத்தப்பட்டன, எனினும் பின்னர் மேலதிக குற்றச்சாட்டுக்களும் சேர்க்கப்பட்டன.

அண்மையில் இடம்பெற்ற விசாரணையின்போது, நீதிபதி டக்ளஸ் ட்ராப்னெல் ரன்பதி அமரசிங்கவை ஒரு 'கொடூரமான கோழை' என்று விவரித்தார்.

இந்தநிலையில் இலங்கைக்கு நாடு கடத்தப்படுவதற்கு முன்னர் அமரசிங்கவுக்கு நீண்ட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட வாய்ப்புள்ளது.

அவருக்கு எதிர்வரும் பெப்ரவரி 24 ஆம் திகதி தண்டனை அறிவிக்கப்படவுள்ளதாக அந்தச் செய்திச் சேவையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கனடாவில் சிறப்பு நடந்தது தமிழர் மரபுத் திங்கள் நிகழ்வு





கனடாவில் வெகுவிமரிசையாக தமிழர் மரபுத்திங்கள் இணையவழி பெருவிழா சிறப்பாக இடம்பெற்றது.

மேற்படி இணையவழி பெருவிழா – 2022 நேற்று (சனிக்கிழமை) கனேடிய நேரம் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

இந்த நிகழ்வு கனடாவில் வெகுவிமரிசையாக நேரலையாக இடம்பெற்றது.

தமிழ் மரபு திங்களுக்கான பிரித்தானிய அரச பேரறிவிப்பைப் பெறும் நோக்கத்துடன் தமிழ் மரபுத்திங்கள் செயற்பாட்டுக் குழுவினர் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகவும் இந்த விழாவை நடத்தி வருகின்றனர்.

கனடாவின் பிராம்டன் நகர் வாழ் தமிழ் சமூகத்தின் வேண்டுகோளுக்கிணங்க பிராம்டன் நகரசபையால் நகரசபையின் பிரதான பூங்காவில் 'தமிழினப்படுகொலை நினைவுத்தூபி' அமைப்பதற்கு அனுமதி வழங்கும் தீர்மானம் கடந்த வருடம் ஜனவரி 20 ஆம் நாள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதற்கு, கனடாவின் அரசியல் பிரமுகர்களும் கட்சி பேதமின்றி தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றார்கள். இலங்கையில் தமிழ் மக்களுக்கு நடந்தது போன்ற இனப்படுகொலை இனிமேல் உலகின் எப்பகுதியிலும் நடக்காதிருக்கச் செய்யும் செயற்பாடுகளுக்கு உந்துதல் தரும் வகையில் இந்த நினைவுத்தூபி இருக்கும் என்றும் கூறப்படுகின்றது.

அந்த வகையில், இதற்கான முதலாவது ஏற்பாட்டாக மாபெரும் நிதிசேர் நிகழ்வு உலகளாவிய ரீதியில் இணையம் வழியாக நேற்று சனிக்கிழமை நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மின்சார மோட்டார் சைக்கிள்களுக்கு அமுலாகுகிறது புதிய நடைமுறைகள்

### வவுனியாவில் மீறினால் சட்ட நடவடிக்கை

வவுனியா மாவட்டத்தில் இது வரையிலான காலமும் மின்சார மோட்டார் சைக்கிள்களுக்கு இலக்கத்தகடு, வாகன வருமான உத்தரவு பத்திரம், காப்புறுதி, தலைக்கவசம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன தேவையற்றனவாகக் காணப்பட்ட நிலையில் தற்போது குறித்த ஆவணங்கள் மற்றும் தலைக்கவசம் என்பன கட்டாயமாக்கப்பட்டுள்ளன என வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவுக்கான பொறுப்பதிகாரி ரொன் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

மின்சார மோட்டார் சைக்கிள்களுக்கு இது வரையிலான காலப்பகுதியில் தலைக்கவசம் உட்பட மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் தேவையின்றிக் காணப்பட்டன.

இந்நிலையில் இனிவரும் காலங்களில் இலக்கத்தகடு, வாகன வருமான உத்தரவு பத்திரம், காப்புறுதி, தலைக்கவசம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அதனை மீறிச் செயற்படும் மின்சார மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் வவுனியா பல இடங்களில் பரவலாகக் குறித்த மின்சார மோட்டார் சைக்கிள்கள் விற்பனை செய்யும் முகவர்கள் எவ்வித ஆவணங்கள், தலைக்கவசம் என்பன தேவையில்லை என மக்களை ஏமாற்றி விற்பனை மேற்கொள்ளப்படுகின்றது. எனவே, மக்கள் அவதானமாகச் செயற்படுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.01.2022இல் வெளியிடப்பெற்றது.